தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1972 டிசம்பர் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை நிறுத்தி வைத்தல் குறித்து

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move the following motion—

"That Rule 22 of the Legislative Assembly Rules in so far as it lays down that the first hour of every sitting shall be available for the asking and answering of questions be suspended and the House do proceed with the next item on the Agenda for today."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் இதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், பேரவையின் முடிவுக்கேற்ப, வினா நேரம் இன்று நிறுத்திவைக்கப்பட்டு, நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த நிகழ்ச்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. மு. சின்னசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கைத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அதனையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.